**Commercial Space for Rent**
450 Square feet for 23,000/- @ first floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
6 month rent as advance
CONTACT 7305837388

# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper – Weekly

*Free Circulation*


**Commercial Space for Rent**
850 Square feet for 27,000/- @ Ground floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
2 L as advance
CONTACT 7305837388

VOL - 3 ISSUE - 8 Editorial : 044-42077328 / 7305837388 email : expressvelachery@gmail.com

GST. : 33AAHPS5278H1ZD
T. PARANJOTHI SELVARAJ
Proprietor
Ph : 2243 1334 / 2243 3334
4303 7770 / 2243 5599
Cell: 9444066626 / 9176317626
SRI DEVI ENTERPRISES
Textiles & Readymades
SDE
1-A,B, Dhandeeswaram Main Road,
Velachery, Chennai - 600 042.
E-mail : sridevitex@yahoo.com
jeno_1985@yahoo.co.in




## 10, 11, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு தேதி: தமிழக மாணவர்களுக்கு தகவல்!



பொதுத்தேர்வு நடத்தப்படும் தேதி தொடர்பாக பள்ளிக் கல்வித்துறை தரப்பில் இருந்து முக்கியத் தகவல் வெளியாகி -யுள்ளது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் கொரோனா ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. இதனால் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டன. மாணவர்கள் வீட்டிலிருந்தபடியே ஆன்லைன் வாயிலாகவும், கல்வி தொலைக்காட்சி, யூ-டியூப் சேனல், வாட்ஸ்-அப் ஆகியவை மூலம் பாடம் கற்று வருகின்றனர். இதற்கான தொழில்நுட்ப வசதிகள் பலரிடம் இல்லாத சூழலிலும் வேறு வழியின்றி பாடம் நடத்தப்பட்டு வந்தது. இதற்கிடையில் பொதுத்தேர்வு நடத்தும் சூழல் வந்தது. கடந்த 2020ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் ஒன்று முதல் 9ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவர்களும் தேர்வுகள் நடைபெறாமல் தேர்ச்சி என்று தமிழக அரசு அறிவித்தது. 11, 12ஆம் வகுப்பிற்கு பொதுத்தேர்வு நடத்தி முடிக்கப்பட்டது.

10ஆம் வகுப்பிற்கு காலாண்டு, அரையாண்டு தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்ச்சி மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. இதையடுத்து வீட்டிலிருந்தபடியே அடுத்த கல்வியாண்டு தொடங்கியது. இந்த சூழலில் மாணவர்களின் சுமையை குறைக்கும் வகையில் 40 சதவீத பாடத்திட்டம் நீக்கப்பட்டது. எஞ்சிய பாடப் பகுதிகளை மட்டும் படித்தால் போதும். ஆதிலிருந்து மட்டுமே கேள்விகள் கேட்கப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை தெரிவித்தது. இதையடுத்து பெற்றோர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டு வந்த நிலையில், அவர்களின் ஒப்புதலுடன் கடந்த ஜனவரி 19ஆம் தேதி 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளிகள் திறக்கப்பட்டன. எனவே பொதுத்தேர்வை கருத்தில் கொண்டு பாடத்திட்டங்களை விரைவாக நடத்தி முடிக்க ஆசிரியர்கள் மும்முரம் காட்டி வருகின்றனர். நடப்பாண்டைப் பொருத்தவரை தமிழக சட்டமன்ற தேர்தல் வரவுள்ளது. வழக்கமாக ஏப்ரல் அல்லது மே மாதத்தில் பொதுத்தேர்வுகள் நடத்தப்படும். இதனைக் கருத்தில் கொண்டும் கொரோனாவால் மாணவர்களின் கல்வி கற்கும் சூழ்நிலையே மாறிவிட்டது. இன்னும் பாடங்களை நடத்தி முடிக்காத சூழல் இருப்பதால் எனவே தேர்தலுக்கு பின் பொதுத்தேர்வுகள் தள்ளிப் போகும் என்று தகவல்கள் வெளியாகின.

**LIBRARY FOR CHILDREN**
At 8/3 Vth Cross Street,
13th Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600 042.
*Timing*
*Monday to Friday 4.00 pm to 6.00 pm*
*Saturday to Sunday 10.00 am to 12.00 pm*
Contact
9171950340 / 8056103724



# அரை மணி நேரத்தில் சென்றடைந்த இதயம்


**தெ**லங்கானா வாராங்கலை சேர்ந்த விவசாயி நரசிம்மா ரெட்டி விபத்து ஒன்றில் காயமடைந்தார். ஹைதராபாத் எல்.பி நகரில் உள்ள காமினேனி மருத்துமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார். மூளைச்சாவு அடைந்த அவருடைய உடல் உறுப்புகளை குடுபத்தினர் தானம் செய்ய முன் வந்தனர். நரசிம்மா ரெட்டியின் இதயம், கல்லீரல், சிறுநீரகம் உள்ளிட்ட எட்டு உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டது. அவருடைய இதயம், ஜூப்ளி ஹில்ஸ் பகுதியில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெறும் ஒருவருக்கு பொருத்த முடிவு செய்யப்பட்டது. காமிநேனி மருத்துவமனையிலிருந்து அப்பல்லோ மருத்துவமனைக்கு சாலை வழியாக செல்ல வேண்டும் என்றால் குறைந்தது இரண்டு மணி நேரமாகும். இதனால் இதயத்தை மெட்ரோ ரயிலில் கொண்டு செல்ல அதிகாரிகள் முடிவு செய்தனர். மருத்துவமனையில் இருந்து ஆம்புலன்ஸ் மூலம் எல்.பி. நகர் மெட்ரோ ஸ்டேசனுக்கு, 5 நிமிடத்தில் இதயம் கொண்டு செல்லப்பட்டது. அங்கிருந்து மெட்ரோ ரயிலில் நான் ஸ்டாப்பாக அரை மணி நேரத்தில் ஜூப்ளி ஹில்ஸ் ஸ்டேசனுக்கு சென்றது. பின்னர் அப்போலோவுக்கு இதயம் கொண்டு செல்லப்பட்டு ஆப்ரேஷன் தொடங்கப்பட்டது. குறிப்பிட்ட நேரத்தில் மெட்ரோ மூலம் இதயம் கொண்டு செல்லப்பட்டதற்கு அதிகாரிகள் மற்றும் மருத்துவர்களுக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

வீடு, மனைகள் விற்பனை மற்றும் வீடு வாடகை இவைகள் நமது எக்ஸ்பிரஸ் வேளச்சேரி இதழில் விளம்பரம் செய்வதற்கு 250/- மட்டும்.

## மேட்டுப்பாளையத்தில் யானைகள் புத்துணர்வு முகாம்

**யா**னைகள் புத்துணர்வு முகாம் நாளை முதல் நடைபெற உள்ளது. மேட்டுப்பாளையம் பவானி ஆற்றுப்படுகையில் 48 நாட்கள் நடைபெறும் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த முகாமில் இந்து சமய அற நிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில் யானைகள் முகாமில் பங்கேற்க உள்ளன. யானைகளுக்கு மதம் பிடித்து அதன் மூலம் உயிரிழப்பு ஏற்படுவதை தடுக்க யானைகள் புத்துணர்வு முகாம் கடந்த 2003ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டது. இதனையடுத்து இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஆண்டுதோறும் கோவில் மற்றும் மடங்களில் உள்ள யானைகளின் உடல் மற்றும் மனம் சார்ந்த உளைச்சலைப் போக்கி, அவை ஓய்வெடுக்கவும் தெம்பு பெறவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. முகாமில் பங்கேற்கும் யானைகளுக்கு மூலிகை உணவுகள், மருந்துகளும் அளிக்கப்படுகின்றன. யானைகளின் நலவாழ்வு கருதியும், அவை முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் அதற்கு புத்துணர்வு அளிப்பதற்காகவும் சிறப்பு நலவாழ்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாமில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில் யானைகள் முகாமில் பங்கேற்க உள்ளன. யானைகள் அனைத்தும் இன்று பகல் 2 மணிக்குள் முகாம் நடக்கும் இடத்திற்கு வந்து சேர வேண்டும். முகாமின் துவக்க விழா நாளை காலை 9 மணி முதல் 10.30 மணிக்குள் நடைபெற உள்ளது.

### சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்





| பெட்ரோல் விலை | டீசல் விலை |
| --- | --- |
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| ₹ 89.39 | ₹ 82.33 |

## Tamil Nadu halves number of Covid-19 wards

**W**ith cases coming down, most government hospitals in Tamil Nadu particularly medical college hospitals that offer tertiary care, closed nearly 50% of Covid-19 isolation wards and turned them into regular wards to treat patients coming with other ailments.

"We have retained 50% of the beds we allotted in the peak season. Only 10% of them are occupied," said director of medical education Dr R Narayanababu.

Hospitals were reporting increase in outpatient numbers, inpatient admissions and surgeries across specialities, he said.

However, heath department officials and doctors are still guarded. "In case there is another spike, we have the facility to quickly create isolation wards with oxygen beds for patients. We have the infrastructure and trained medical staff too," he said.

On Tuesday, the state reported four Covid-19 deaths and 510 fresh cases, which pushed the death toll to 12,367 and cumulative case tally to 8,39,352. There were 4,517 people still under treatment for the viral infection.

Barring Perambalur, all districts reported new infections. Four districts Chennai, Kanyakumari, Sivaganga and Tenkasi -- reported one death each.

On Tuesday, Chennai topped the cases table with 142 cases and Coimbatore reported 54 cases. All other districts reported 54 cases. All other districts reported less than 35 cases, and 23 districts reported a single digit increase.

After discharging 521 people, the state revised the number of people cured to 8,22,468 and the recovery rate went up to 98%.

TOLET RENT VELACHERY
350 Square feet
INDEPENDENT HOUSE
*Working women 1or 2 Girls*
Contact- 7397354283

## <u>சொல்லுங்க தெரிஞ்சுக்கிறோம்!</u>

# கோபுர கலசத்தில் தானியம் நிரப்புவது ஏன்..?

நெல், கம்பு, கேழ்வரகு, திணை, சோளம், மக்காச்சோளம், சாமை, எள் ஆகியவை கோபுர கலசத்தில் இருக்கும். குறிப்பாக தானியம் அதிகமாக இருக்கும். காரணம் என்னவென்றால் 'வரகு' மின்னலைத் தாங்கும் அதிக ஆற்றலைப் பெற்றது என அந்த காலத்திலேயே அறிந்து வைத்துள்ளார்கள். இந்த நுட்பம் மிகவும் சரியான விஷயம் என இப்போதுள்ள அறிவியல் கூறுகிறது.

இயற்கை சீற்றத்தினால் விவசாயங்கள் அழிந்து போனாலும் மீண்டும் விவசாயம் செய்ய தானியங்களை கோபுர கலசத்தில் இருந்து எடுத்து பயன்படுத்தலாம் இந்த தானியங்களில் திறன் 12 வருடங்கள் வரை தாக்குப் பிடிக்கக்கூடியது அதற்குப் பிறகு தானியங்கள் தன் சக்தியை இழந்து விடும் என்பதால் 12 வருடங்களுக்கு ஒருமுறை குடமுழுக்கு விழா என்ற பெயரில் கலசங்களில் இருக்கும் பழைய தானியங்கள் நீக்கப்பட்டு புதிய தானியங்கள் நிரப்பப்படுகிறது.



## சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | 22 கேரட் | 24 கேரட் |
| --- | --- | --- |
| <u>தங்கம் விலை -</u> | 1 கிராம் ₹ 4,454 | 1 கிராம் ₹ 4,858 |
| | 8 கிராம் ₹ 35,632 | 8 கிராம் ₹ 38,864 |
| <u>வெள்ளி விலை -</u> | 1 கிராம் ₹ 72.60 | |
| | 1 கிலோ ₹ 72,600 | |

## <u>திருக்குறள்</u>

**தமிழ்**

**10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.**

**English**

**They swim the sea of births, the 'Monarch's' foot who gain;**
**None others reach the shore of being's mighty main**



# <u>யோகாசனம்</u>

## கதிசக்ராசனாம்



**கதிசக்ராசனா யோகாவின் பயன்கள்:**

- உடலில் இருக்கும் மலச்சிக்கலை நீக்கும்.
- அதுமட்டும் இல்லாமல் கதிசக்ராசனா யோகாவால் முதுகெலும்பு மற்றும் இடுப்பின் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்தும் சக்தியை பெற்றுள்ளது இந்த ஆசனம்.
- இந்த யோகாசனம் செய்து வந்தால் கை, கால் தசைகள், கழுத்து பகுதிகள் நன்கு சீராக இருக்கும்.
- தோல்கள் வயிற்று தசைகளை பலப்படுத்தும்.

## ஆன்மீக பகுதி

### கருட தரிசனம் செய்வதால் உண்டாகும் அற்புத பலன்கள்

கருட தரிசனம் செய்வது பெருமாளே நேரில் வந்து நமக்கு வெற்றி வாழ்த்து சொல்வதற்கு சமம் ஆகும்.

நமது காரியம் வெற்றி பெறும் என்று இருந்தால் தான் மகா விஷ்ணுவாகிய ஸ்ரீ நாராயணன் கருடன் தரிசனம் கிடைக்கச் செய்வார் இல்லையெனில் கருட தரிசனம் கிட்டாது.

நவரத்தினங்களில் ஒன்றான பச்சை நிறமுள்ள மரகதத்திற்கு கருடோத்காரம் அல்லது காருடமணி என்று பெயர். கருடனால் விழுங்கி துப்பப்பட்ட பலாசுரன் என்ற அசுரனின் எலும்புகளே மரகதமாக மாறின. இதை அணிவதால் பாம்பு போன்ற விஷ ஜந்துக்களால் துன்பம் ஏற்படாது.

அமிர்தக் குடத்தை எடுத்துவர தேவலோகம் சென்ற கருடன், அங்குள்ள தர்பைப் புல்லையும் பூலோகத்திற்குக் கொண்டு வந்தார். அமிர்தத்துடன் தர்ப்பையையும் கொண்டு வந்ததால் அதனை அமிர்தவீர்யம் என்ற பெயரில் அழைக்கின்றனர்.

கருடனுக்கு கஸ்தூரி, குங்குமப்பூ, புனுகுச்சட்டம் ஆகியவற்றை வாழைச்சாற்றில் கலந்து அவரது திருமேனியில் சாற்றி வேண்டிக் கொண்டால் அனைத்து இஷ்ட சித்திகளையும் எளிதில் அடையலாம்.

கருட புராணத்தை அமாவாசை, பவுர்ணமி, மாதப் பிறப்பு, கிரகணம், சிராத்தம் போன்ற முக்கிய தினங்களில் படிப்பது காரியத் தடைகளை அகற்றி ஜெயம் அளிக்கும்.

# இந்த வார ராசிபலன்

**மேஷம்**



வேலைப் பகுதியில் உள்ள நிலைமைகள் உங்களுக்கு ஆதரவாக வரத் தொடங்கும். உங்கள் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்ததாக இருக்கும்.

**துலாம்**



குடும்பத்தில் அமைதி இருக்கும். எல்லோரும் ஒருவருக்கொருவர் அன்பாக உணருவார்கள். உங்களுக்கு மரியாதை கிடைக்கும். பெற்றோரின் ஆரோக்கியமும் நன்றாக இருக்கும்.

**ரிஷபம்**



குடும்ப வாழ்க்கையில் சில சிக்கல்கள் வரும். ஆனால் உங்கள் பணித் துறையில் உங்களை உயர் மட்டத்திற்கு அழைத்துச் செல்லும். நீங்கள் தொழிலில் வெற்றி பெறுவீர்கள்.

**விருச்சிகம்**



இந்த நேரம் உங்களுக்கு வருமானத்தில் கொஞ்சம் கடினமாக இருக்கும். இருப்பினும் விடா முயற்சியுடன் செயல்படுங்கள். உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்**



இந்த நேரத்தில், நீங்கள் பணத்தையும் மனதையும் இரண்டையும் மனிதநேயப் பணிகளில் முதலீடு செய்வீர்கள். உங்கள் தந்தையுடனான உறவு வலுவாக இருக்கும்.

**தனுசு**



உங்கள் தைரியமும் வலிமையும் ஆதிகரிக்கும். உங்கள் பணித் துறையிலும் நீங்கள் ஒரு நல்ல இடத்தைப் பெறுவீர்கள் மற்றும் உங்கள் மரியாதையும் கவுரவமும் அதிகரிக்கும்.

**கடகம்**



இந்த நேரம் ஏற்ற தாழ்வுகள் நிறைந்ததாக இருக்கும். நீங்கள் புத்திசாலித்தனமாக பணத்தை முதலீடு செய்ய வேண்டும், இல்லையெனில் நிதி இழப்பு ஏற்பட வேண்டியிருக்கும்.

**மகரம்**



குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி இருக்கும் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடையே ஒருவருக் -கொருவர் நல்லிணக்க உணர்வைக் கொண்டிருப்பார்கள்.

**சிம்மம்**



நீங்கள் எதிரிகளிடம் கவனமாக இருக்க வேண்டும். அவற்றை வெல்ல நீங்கள் பயன்படுத்தக் கூடிய அறிவும் புத்திசாலித்தனமும் உங்களிடம் உள்ளன.

**கும்பம்**



உங்களுக்கு மகிழ்ச்சியான மன நிலையைத் தரும். இந்த நேரத்தில் நீங்கள் சில வலுவான முடிவுகளை எடுப்பீர்கள். இது எதிர்காலத்தில் உங்களுக்கு லாபகரமாக இருக்கும்.

**கன்னி**



உங்கள் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுவீர்கள். இதனால் மனரீதியாக புத்துணர்ச்சி பெறுவீர்கள். இது உங்கள் வேலையை மேம்படுத்துவதோடு செயல்திறனையும் அதிகரிக்கும்.

**மீனம்**



உங்கள் வருமானம் அதிகரிக்கும் மற்றும் எதிர்கால நன்மைகளை மனதில் கொண்டு சில புதிய திட்டங்களை உருவாக்குவீர்கள். அதிக உழைப்பின் மூலம் வெற்றிபெறுவீர்கள்.

## Indian-American Bhavya Lal appointed acting chief of staff of Nasa



Indian-American Bhavya Lal was on Monday appointed by Nasa as the acting chief of staff of the US space agency.

Lal served as a member of the Biden presidential transition agency review team for the agency and oversaw the agency's transition under the administration of President Joe Biden.

In a statement, Nasa said Lal brings extensive experience in engineering and space technology, serving as a member of the research staff at the Institute for Defence Analyses Science and Technology Policy Institute (STPI) from 2005 to 2020. There, she led analysis of space technology, strategy, and policy for the White House office of science and technology policy and national space council, as well as well as federal space-oriented organisations, including Nasa, the department of defence, and the intelligence community.

Lal is an active member of the space technology and policy community, having chaired, co-chaired, or served on five high-impact National Academy of Science committees.

She served two consecutive terms on the National Oceanic and and Atmospheric Administration Federal Advisory committee on commercial remote sensing and was an external council member of Nasa's Innovative Advanced Concepts Program and the Technology, Innovation and Engineering Advisory committee of the Nasa advisory council.

Before joining STPI, Lal was president of C-STPS LLC, a science and technology policy research and consulting firm. Prior to that, she was the director of the Center for Science and Technology Policy Studies at Abt Associates, a global policy research consultancy based in in Cambridge, Massachusetts.

She co-founded and is co-chair of the policy track of the American Nuclear Society's annual conference on Nuclear and Emerging Technologies in Space (Nets) and co-organises a seminar series On space history and policy with the Smithsonian National Air and Space Museum.

For her many contributions to the space sector, she was nominated and selected to be a corresponding member of the International Academy of Astronautics, the statement said.

Lal earned a Bachelor of Science and Master of Science degrees in nuclear engineering, as well as a Master of Science degree in technology and policy, from the Massachusetts Institute of Technology, and holds a doctorate in public policy and public administration from George Washington University. She is a member of both the nuclear engineering and public policy honor societies.

## தேவநேயப் பாவாணர் (Devaneya Pavanar)

### பிறந்த தினம் இன்று! பிப்ரவரி, 7 - 1902



தேவநேயப் பாவாணர் (Devaneya Pavanar) பிப்ரவரி 7 -1902 ல் பிறந்தார். மிகச்சிறந்த தமிழறிஞரும், சொல்லாராய்ச்சி வல்லுநருமாவார். ஞானமுத்து என்னும் கணக்காயருக்கும், பரிபூரணம் அம்மையார் என்னும் கணக்காய்ச்சியருக்கும் பத்தாவது மகனாக பிறந்தார். சங்கரநயினார் கோயில் வட்டம் வட எல்லையாகிய சீயோன்மலை என்னும் முறம்பில் "யாங்" துரை என்பார் காப்பில் தேவநேயப் பாவாணர் தொடக்கக் கல்வி பயின்றார்.

இவர் 40க்கும் மேலான மொழிகளின் சொல்லியல்புகளைக் கற்று மிக அரிய சிறப்புடன் சொல்லாராய்ச்சிகள் செய்துள்ளார். மறைமலை அடிகளார் வழியில் நின்று தனித்தமிழ் இயக்கத்திற்கு அடிமரமாய் ஆழ்வேராய் இருந்து சிறப்பாக உழைத்தார். இவருடைய ஒப்பரிய தமிழறிவும் பன்மொழியியல் அறிவும் கருதி, சிறப்பாக, பெருஞ்சித்திரனாரால் "மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்" என்று அழைக்கப்பட்டார்.

தமிழ், உலக மொழிகளில் மூத்ததும், மிகத்தொன்மையான காலத்திலேயே செம்மையான மொழியாக வடிவம் பெற்றது எனவும் திராவிடத்திற்குத் தாயாகவும், ஆரியத்திற்கு மூலமாகவும் விளங்கிய மொழியென வாதிட்டவர். "கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் உள்ளிட்டவைகளுக்குத் தன் சொற்கள் பலவற்றை அளித்தது" என்று நிறுவியவர் பாவாணர் ஆவார். தமிழின் வேர்ச்சொல் வளத்தையும் செழுமையையும் சுட்டிக்காட்டி, அதன் வளர்ச்சிக்கான வழியையும் அவரின் நூல்களின் வழி உலகிற்கு எடுத்து இயம்பினார்.

## பொன்மொழிகள்

அவசரமாகத் தவறு செய்வதை விட தாமதமாகச் சரிவர செய்வது மேல்.

- ஜெபர்சன்...

# Chutties Corner

## BIRTHDAY WISHES





Kenneth Kingston
February - 2



Mahant
February - 3

## PAPER CRAFT





## தனித்திறமை பகுதி





B.R.Jaivaibav,
Saidapet

Keziah Rachel



படத்தில் உள்ள 6 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!





Find 6 Differences?

உங்கள் வீட்டு குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்த, அவர்களின் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை அவர்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெய்ல் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

## வண்ணம் தீட்டுக



☆ ☆ ☆ ☆ ☆

5 Star ratings from your parents

Nellai Machãnin
RUSIKKARAN ™
RESTAURANT | CATERING SERVICE | VEG & NON VEG
37F | VELACHERY TO TAMBARAM MAIN ROAD | VIJAY NAGAR
VELACHERY | CHENNAI 600 042 | TN | MOBILE 759 825 6999
Email:rusikkaran@gmail.Com

CIN: U60210TN2020PTC134769
SML CHENNAI CARS PVT LTD
Drive The World
ONE STOP DESTINATION FOR ALL YOUR CAR NEEDS



No 37 F, Vijaya Nagar Road, velachery, Chennai-600042.
Email: chennaicars555@gmail.com | www.chennaicar.in
Ph. 044 42106600 | 91504 72441

நாவில் நடனமாடும் சுவைக்கு...





கங்கா ஸ்வீட்ஸ்
GANGA SWEETS
PURE GHEE SWEETS
Mail us @ gangasweets@gmail.com
Visit us @ www.gangasweets.com
HEAD OFFICE
Tel.: 4264 5911 / 2615 4635

BRANCHES
Anna Nagar Blue Star 4263 3086
Anna Nagar West Extn. 4264 5917
Anna Nagar 1st Main Road 4350 0998
Thiruvanmiyur 4230 0911
Velachery 4232 5234
Pallavaram 4207 3157
Kolathur 4286 6809/10

உ
முப்பிடாரி முத்துமாலை அம்மன் துணை
பத்ரகாளி அம்மன் துணை
ஸ்ரீ தேவி நாடார் திருமண தகவல் மையம்
வாருங்கள் இணைப்போம்!
திருமண மேளம் முழங்கிட செய்வோம்!



இந்து நாடார் இன மணமகன் - மணமகளின் பெற்றோர் விருப்பத்திற்கேற்ப பொருத்தமான நல்ல வரன்களின் ஜாதக தகவல்களை தந்து, சேவை கட்டணம் பெரும் கைராசியான திருமண தகவல் மையம். பதிவு கட்டணம் 1000/- மட்டுமே உள்நாட்டில் பணிபுரியும் டாக்டர்கள், இன்ஜினியர்கள் மற்றும் வியாபாரிகளின் ஜாதகங்கள் மட்டுமின்றி வெளிநாட்டில் பணிபுரிபவர்களின் ஜாதகங்களை பற்றிய தகவல்களும் இவ்விடம் கிடைக்கும்.
அமைப்பாளர்கள் :
A. பிருந்தாதேவி
G. செல்வி
9841638387
9791370555
9080840288

## சுடோக்கு விளையாட்டு

கட்டத்தில் உள்ள எண்களுக்கு ஏற்ப சரியான விடையை கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | 7 | | 1 | | 3 | |
| 4 | | 9 | | | | | | |
| | 5 | | | 6 | | 4 | 1 | 8 |
| 7 | | | | | 9 | | | |
| 8 | | | 6 | 1 | | 5 | | |
| | 3 | 5 | | | | | 2 | 9 |
| | 6 | | 4 | | 7 | | 9 | |
| 1 | | | | | 8 | | | 4 |
| | 2 | | | 5 | | | 7 | |

## சென்ற வார சுடோக்குப் புதிருக்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 9 | 3 | 1 | 4 | 7 | 6 | 8 |
| 8 | 7 | 1 | 6 | 2 | 9 | 4 | 5 | 3 |
| 6 | 4 | 3 | 5 | 8 | 7 | 1 | 9 | 2 |
| 9 | 6 | 7 | 8 | 3 | 5 | 2 | 1 | 4 |
| 4 | 1 | 8 | 9 | 7 | 2 | 5 | 3 | 6 |
| 3 | 2 | 5 | 4 | 6 | 1 | 9 | 8 | 7 |
| 7 | 9 | 6 | 2 | 5 | 3 | 8 | 4 | 1 |
| 1 | 8 | 4 | 7 | 9 | 6 | 3 | 2 | 5 |
| 5 | 3 | 2 | 1 | 4 | 8 | 6 | 7 | 9 |



## உலர் திராட்சையின் பயன்கள்

❖ தினசரி உணவுக்குப் பின்னர் காலை மாலையில் 25 உலர்திராட்சைப் பழங்களைத் தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிட்டால் மூலநோய் குணமாகும்.

❖ உலர் திராட்சைப் பழத்தை வெது வெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் மற்றும் இதய நோய் தீரும்.

❖ இதில் உள்ள கால்சியம் சத்து எலும்பு மற்றும் பற்களின் வளர்ச்சிக்கு உதவும்




## குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்துக்கு பதிலாக sanitiser அளிக்கப்பட்டது...

மகாராஷ்டிராவின் யவத்மால் மாவட்டத்தில் இருந்து அலட்சியத்தின் அதிர்ச்சியூட்டும் சம்பவம் ஒன்று வெளிச்சத்துக்கு வந்துள்ளது. அங்கு போலியோ சொட்டு மருந்துக்கு பதிலாக 12 குழந்தைகளுக்கு சேனிடைசர் வழங்கப்பட்டது தெரிய வந்துள்ளது. இதைத் தொடர்ந்து 1 முதல் 5 வயது வரையிலான இந்த குழந்தைகள், யவத்மாலில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் (GMCH) சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

குழந்தைகள் சுமார் 48 மணி நேரம் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தனர். குழந்தைகளின் உடல்நிலை சீராக இருப்பதாக கூறப்படுகிறது என்று யவத்மால் மாவட்ட சுகாதார அதிகாரி ஹரி பவார் தெரிவித்தார்.

யவத்மல் ஜில்லா பரிஷத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கிருஷ்ணா பஞ்சலின் கூற்றுப்படி, கட்டன்ஜி தெஹ்ஸிலிலுள்ள பம்போரா பொது சுகாதார மையத்தின் (PHC) கப்சி துணை மையத்தில் குழந்தைகளுக்கு சொட்டு மருந்துக்கு பதிலாக இரண்டு சொட்டு சானிடைசர் (Sanitiser) வழங்கப்பட்டது.

தவறுதலாக சானிடைசர் வழங்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோரை பணியாளர்கள் மீண்டும் சுகாதார மையத்திற்கு அழைத்தனர்.

போலியோ சொட்டு மருந்து (Polio Drops) வழங்கப்பட்ட நாளில் மதியம் 2 மணியளவில், போலியோ சொட்டு மருந்துகள் இருக்க வேண்டிய இடத்தில் சானிடிசர் இருப்பதை அந்த சுகாதார மையத்தின் மூன்று ஊழியர்கள் உணர்ந்தனர். சமூக சுகாதார அதிகாரி, ஆஷா பணியாளர் ஒருவர் மற்றும் அங்கன்வாடி சேவிகா ஆகியோர் இந்த தவறை கண்டறிந்தனர். இதைத் தொடர்ந்து, இந்த சுகாதார ஊழியர்கள் (Health care workers) அந்த குழந்தைகளின் பெற்றோரை சுகாதார மையத்துக்கு அழைத்து போலியோ மருந்து சொட்டுகளை அளித்தனர். இதில் ஒரு குழந்தை மட்டுமே வாந்தியெடுத்தது.

இதற்கிடையில், இந்த விஷயம் சர்பஞ்சை அடைந்தது. அவர் உயர் அதிகாரிகள் மிகவும் முட்டாள்தனமாகவும் அஜாக்கிரதையாகவும் நடந்துகொள்வதாக புகார் கூறினார். இது போலியோ சொட்டுகளால் கூட ஏற்படலாம். ஆனால் அது பிரச்சினை அல்ல. ஊழியர்களின் அலட்சியமான போக்குதான் இங்கு முக்கியமான பிரச்சனை. நாங்கள் விசாரணையைத் தொடங்கியுள்ளோம். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.




✦ தேங்காய் பாலில் புரதம், இரும்பு, பொட்டாசியம் உள்ளது. இது முடி உதிர்வையும், உடைதலையும் குறைக்கும். தேங்காய் பாலை எடுத்து. தலையில் வேண்டிய இடத்தில் தடவுங்கள். இரவு முழுவதும் அப்படியே விட்டு விடுங்கள். மறுநாள் காலை குளிர்ந்த நீரில் கழுவி விடுங்கள். மிகச்சிறந்த முடி வளர்ச்சிக்கான சிகிச்சை இதுவாகும்.

✦ வெந்தய விதைகள் தலைமுடியை வலிமையாகவும், மென்மையாகவும், பட்டுப்போன்றும் மாற்றும். சிறிது வெந்தயத்தை நீரில் ஊற வைத்து அரைத்து, தேங்காய் எண்ணெய் சேர்த்து கலந்து, தலைமுடியில் தடவி ஒரு மணிநேரம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரால் தலைமுடியை அலச வேண்டும். தலைமுடி உதிர்வதைத் தடுக்கும்.

✦ பலவீனமான மற்றும் வறண்ட தலைமுடிக்கு கடுகு எண்ணெய் மிகவும் நல்லது. கடுகு எண்ணெயை வெதுவெதுப்பாக சூடேற்றி, அதை தலைமுடியின் வேர்ப்பகுதியில் படும்படி தடவி மசாஜ் செய்து, வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

## வண்ணக்கோலம்




## மெகந்தி டிசைன்














# குலம் தழைக்க வைக்கும் கதிராமங்கலம் வனதுர்க்கை

தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் இருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் உள்ளது கதிராமங்கலம் திருத்தலம். இங்கு தனக்கென தனிக்கோயில் கொண்டு அருளாட்சி புரிகிறாள், அருள்மிகு வனதுர்கா பரமேஸ்வரி. இந்த அம்பிகை அனுதினமும் காசிக்குச் சென்று வருவதாக ஐதீகம். அதற்குக் காரணம் ஒரு முனிவர்!

தினமும் காசிக்குப் போகும் வனதுர்கை. வேதங்களே விருட்சங்களாக வளர்ந்து நின்று இறைவழிபாடு செய்த புண்ணியம்பதியாம் வேதாரண்யம் திருத்தலத்தைத் தரிசிக்கச் சென்று கொண்டிருந்தார் அந்த முனிவர்.

அவர் செல்லும் வழியில், அசுரன் ஒருவன் மலை உருவில் நெடிதுயர்ந்து வளர்ந்து நின்று அவரை வழிமறித்தான். அவனை அழிக்கும் சக்தி வேண்டும் என்று துர்கா தேவியைப் பிரார்த்தித்து தவம் செய்தார் முனிவர். அவருடைய தவத்தால் மகிழ்ந்த துர்கை, முனிவருக்குக் காட்சி தந்தாள். அவர் வேண்டியபடியே அசுரனை அழிக்கும் சக்தியையும் வழங்கி அருள்பாலித்தாள். அசுரனை அழித்த முனிவர், தனக்குப் பேரருள் புரிந்த துர்கை அம்மனை அனுதினமும் வழிபட்டு வந்தார். நாட்கள் கழிந்தன.

காசிக்குச் செல்ல விரும்பினார் முனிவர். ஆனால், காசிக்குச் சென்றுவிட்டால், துர்கையம்மனை வழிபட முடியாதே என கலங்கினார். அவருடைய கலக்கத்தை அகற்ற திருவுளம் கொண்ட துர்காதேவி, அனுதினமும் இரவுப் பொழுதில் காசிக்கு வந்து முனிவருக்குத் தரிசனம் தருவதாக திருவாக்கு தந்தாள். அதன்படியே, இன்றைக்கும் கோயில் கருவறை விதானத்தில் இருக்கும் துளை வழியே, தினமும் வனதுர்கா பரமேஸ்வரி அம்மன் காசிக்குச் சென்றுவருவதாக, சிலிர்ப்புடன் விவரிக்கிறார்கள் பக்தர்கள்.

வனதுர்கையிடம் வரம் பெற்ற அந்த முனிவர் யார் தெரியுமா? நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான் என்றும், வடாதுதிசை மேல்நாள் நீசம் உற, வானின் நெடுமா மலயம் நேரா, ஈசன் நிகர் ஆய், உலகு சீர் பெற இருந்தான் என்றும் கவிச்சக்ரவர்த்தி கம்பரால் போற்றி சிறப்பிக்கப்பெற்ற குறுமுனிவராம் அகத்தியர்தான் அவர்.

இந்த முனிவர் பெருந்தகை தனக்கு சக்தி தந்த அன்னையை, வாழ்வளித்த அன்னை வனதுர்கா என்று போற்றினாராம். அதன் காரணம் தொட்டு, இந்த அம்பிகைக்கு வனதுர்கை என்று திருநாமம் ஏற்பட்டது என்கிறார்கள்.

தினமும் காசிக்குப் போகும் வனதுர்கை இந்தத் திருத்தலத்துக்கு கதிராமங்கலம் எனும் பெயர் ஏற்படவும் ஒரு காரணக் கதை உண்டு.

இவ்வூரின் அருகில் அமைந்திருக்கிறது தேரழுந்தூர். கம்பர் வசித்த ஊர் இது. அவரது இல்லத்தின் கூரை பழுதுபட்டிருந்தது. ஒரு மழைக் காலத்தின் இரவுப் பொழுதில், வனதுர்கையை மனதால் துதித்த கம்பர், அன்னையின் அருள் தன்னைக் காக்கவேண்டும் என்று பிரார்த்தனை விட்டு உறங்கிப்போனார்.

மறுநாள் காலையில், அவரது இல்லத்தின் கூரை நெற் செய்து கதிர்களால் வேயப்பட்டிருந்ததைக் கண்டு வியந்தார் கம்பர். இது அன்னை நிகழ்த்திய அற்புதமே என்று உணர்ந்தவர், வனதுர்கையை கதிர்தேவி, கதிர்வேந்த மங்கள நாயகி என்றெல்லாம் போற்றித் தொழுதார். இதையொட்டியே இந்த ஊருக்கும் கதிராமங்கலம் எனும் பெயர் வாய்த்ததாம்.

தினமும் காசிக்குப் போகும் வனதுர்கை அகத்தியருக்கும் கம்பருக்கும் மட்டுமல்ல இன்னொரு -வருக்கும் அருள் செய்திருக்கிறாள் இந்த அம்பிகை. அவர், மிருகண்டு மகரிஷி. பதினாறு வயதில் தன் மகன் மார்க்கண்டேயன் இறந்துவிடுவானே என்ற சோகத்தால் அல்லலுற்ற மிருகண்டு முனிவர், தன் மகனின் ஆயுள் சிறக்கவேண்டி பல்வேறு தலங்களுக்கும் சென்று வழிபட்டார்.

அவ்வாறு செல்லும் வழியில், கதிராமங்கலத்தில் உலக நலன் வேண்டி அம்பிகை மோன தவம் செய்யும் காட்சியைக் கண்டார். தன் மகன் நீண்ட ஆயுள் பெற்று வாழ அருளும்படி அந்த அன்னையை வேண்டினார். அதையேற்ற அம்பிகை மார்க்கண்டேயன் சிரஞ்ஜீவியாகத் திகழ்வான் என்றால். அவளின் திருவாக்குப்படியே அனைத்தும் நடந்தது.

பொதுவாக துர்கையம்மன் ஆலயம் வடக்கு அல்லது தெற்குநோக்கி அமைந்திருக்கும். ஆனால், இங்கே கிழக்குநோக்கி அருள்பாலிக்கிறாள். வனதுர்கையம்மன் கோயிலில் விநாயகர் இல்லை.

மூன்றுநிலை ராஜகோபுரத்துடன் திகழும் இந்த அழகிய ஆலயத்தின் கருவறையில், ஏகதள விமானத்தின் கீழ், தாமரை பீடத்தில் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறாள் அன்னை. மேலிரு கரங்களில் சங்கும் சக்கரமும் திகழ, கீழிரு கரங்களில் வலக்கரம் அபயம் காட்ட, இடக்கரம் ஊர்த்துவ ஹஸ்தமாக அழகுப் பொங்க காட்சியளிக்கிறாள் அருள்மிகு வனதுர்கை அம்மன்.

ராகுபகவானின் இஷ்ட தெய்வம் துர்கை. எனவே அவர் துர்கையை பூஜை செய்யும் (ராகு காலத்தில்), நாம் அவளை வழிபடுவது கூடுதல் விசேஷம். ராகு தோஷம் உள்ளவர்கள் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களில் ஏதேனும் ஒருநாள், இந்தத் தலத்துக்கு வந்து, துர்கா தேவிக்கு 108 எண்ணிக்கையிலான எலுமிச்சை பழங்களால் மாலை கோத்து, அம்மனுக்குச் சமர்ப்பித்து வழிபடலாம்.

மாங்கல்ய தோஷம் உள்ளவர்கள் செவ்வாய்க் கிழமைதோறும் விரதமிருந்து பால் அபிஷேகம் செய்து, குங்குமத்தால் அர்ச்சனை செய்து வழிபட்டால் தோஷம் விலகும் என்பது நம்பிக்கை. குடும்ப விருத்திக்காக இந்த அம்பிகைக்கு சந்தனத்தால் அபிஷேகம் செய்து வழிபட்டுச் செல்கிறார்கள் பக்தர்கள். அதேபோல், பகைவர்களால் ஏற்படும் தொல்லைகள் நீங்குவதற்கு குங்கும காப்பு சாற்றி, செவ்வரளி பூக்களால் அர்ச்சித்து வழிபடுகின்றனர்.

மேலும், திருமணத் தடைகள் நீங்கவும், குழந்தை பாக்கியம் கிடைக்கவும், வியாபாரம் விருத்தி -யடையவும் இந்த அம்மனிடம் வந்து பிரார்த்திக்கிறார்கள். இல்லத்தில் செல்வம் செழிக்க செந்தாமரை பூக்களாலும், கடன்கள் தீர்வதற்கு செவ்வரளி பூக்களாலும், திருமணம் கைகூட மஞ்சள் நிற மலர்களாலும் இந்த அம்பிகைக்கு அர்ச்சனை செய்து வழிபட்டால், அவளின் திருவருளால் விரைவில் பலன் கிடைக்கும். என்பது பக்தர்களின் நம்பிக்கை.



# விவசாயம் காப்போம்

## தென்னையில் அதிக மகசூல் பெற வழிகள்

தென்னையில் மேல் இலைகள் பசுமையாகவும் அடிஓலைகளில் வெளிர்நிற புள்ளிகள் தோன்றி மஞ்சள் நிறமடைந்து பின்னர் பழுப்பு நிறமாக மாறும். ஓலைகள் கீழ்நோக்கி தொங்க தொடங்கி முதிர்ச்சி அடையாமலேயே உதிர்ந்து விடும். தேங்காய்கள் சிறுத்து எண்ணிக்கை மிகக் குறைந்தும் காணப்படும்.

நுண்சத்து பற்றாக்குறையுடைய தென்னை மரங்களின் ஓலைகளில் நடுநரம்பில் இருபக்கங்களிள், நுனி ஓலை ஆகியவை மஞ்சள் நிறமாக மாறும். அடிப்பகுதி பச்சையாக இருக்கும். இளங்கன்றுகளில் ஓலை பிரியாமல் இருக்கும். குருத்து ஓலைகள் வளர்ச்சி இல்லாமலும் இருக்கும். பாளையில் இளம்பிஞ்சுகள் காய்ந்து கருகி காணப்படும். இந்த குறைகள் ஏற்படாமல் தவிர்க்க தென்னை மரம் ஓர் ஆண்டிற்கு 540 கிராம் தழைச்சத்து 260 கிராம் மணிச்சத்து 820 கிராம் சாம்பல்சத்து இவற்றை மண்ணில் இருந்து எடுக்கும். மண்ணில் இந்த சத்துக்கள் குறைந்தால் மரத்திற்கு தேவையான பேரூட்டச் சத்துக்களில் பற்றாக்குறை ஏற்படும்.

தழைச்சத்து குறைந்தால் தென்னங்கன்றில் வளர்ச்சி குறையும். வளர்ந்த மரங்களில் அனைத்து ஓலைகளும் பச்சை நிறம் குறைந்து மஞ்சள் நிறமாக மாறும். நீர்சத்து வறண்டு தேங்காய்கள், அளவும் எண்ணிக்கையும் குறைந்து காலதாமதமாக காய்க்கும்.



மணிச்சத்து பற்றாக்குறைகள் தென்னையில் காணப்படுவதில்லை. சாம்பல்சத்து 5 வயதிற்கு மேல் உள்ள தென்னை மரத்திற்கு ஒரு ஆண்டிற்கு ஐம்பது கிலோ மக்கிய தொழுஉரத்துடன் 1.3 கிலோ யூரியா, 2கிலோ சூப்பர் பாஸ்பேட், 2கிலோ பொட்டாஷ் உரங்களை கலந்து கொண்டு இரண்டு சமபாகமாக பிரித்து மண் ஈரப்பதமாக இருக்கும்போது ஆறு மாத கால இடைவெளியில் வருடத்திற்கு இரண்டு முறையாக வைக்க வேண்டும்.

மரத்திலிருந்து ஐந்து அடி தூரத்திலிருந்து வட்டமாக மண்வெட்டியால் குழிதோண்டி மண்வெட்டியால் உரத்தை மண்ணுடன் கலந்து நீர்பாய்ச்ச வேண்டும்.

நுண்சத்துப் பற்றாக்குறையை போக்க ஆண்டுதோறும் ஒரு மரத்திற்கு ஒரு கிலோ வீதம் தென்னை நுண்ணூட்ட சத்து உரத்தினை மரத்தின் மத்தளப் பகுதியினை சுற்றி வேர் பகுதியில் இட்டு கொத்திவிட்டு மண்ணுடன் கலந்து பின் நீர் கட்டவேண்டும்.

தென்னை ஊட்டச்சத்து கரைசலை மரத்திற்கு 200 மி.லி. வீதம் ஆறு மாதத்திற்கு ஒருமுறை வேர்மூலம் செலுத்த வேண்டும்.

# Entertainment Corner

## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | ■ |
| ■ | ■ | ■ | ■ | ■ | | ■ |
| 3 | | | 4 | | | |
| | ■ | ■ | | ■ | | ■ |
| | ■ | ■ | | ■ | | ■ |
| 5 | | 6 | ■ | 7 | | |
| | ■ | | ■ | | ■ | ■ |

இடமிருந்து வலம்:

1. கதிரவனும் தேசத் தந்தையும் சேர்ந்த பூ (6)
3. ஆடி மாதம் 18-ஆம் நாள் நடனமாடிக் கொண்டே வீட்டைச் சுத்தம் செய் (7)
5. மரங்கள் நட்டு நீர் ஊற்றியதால் கிடைத்த பச்சை தன்மை (3)
7. வெயில் விரும்பும் பழம் ___ திருடி (3)

மேலிருந்து கீழ்:

2. “அகர முதல” என்று துவங்கும் நூல் (6)
3. துவக்கம் (5)
4. பெரிய இங்க் பாட்டில் வாங்கிய கர்வம் (3)
6. ப்ரவுன் நிற உடல், கருப்பு நிறத் தலை, வால் நுனியில் சிறிது இளம் வெள்ளை நிறம். என்ன பறவை இது?(2)
7. (பழம்)______ இருப்பக் காய் கவர்ந்தற்று (2)

சென்ற வார குறுக்கெழுத்து புதிருக்கான விடைகள்

இடமிருந்து வலம்:

1. மருத்துவர் 4. பற்று 5. தந்திரசைகை 8. திகழ் 11. தகுமோ 14. கலகலப்பு 15. கை கழுவ 16. மல்லன்

மேலிருந்து கீழ்:

1. மத்தளம் 2. வரிசை 3. சிறுமி 6. திடமாகு 7. கைதி 9. கதை பல சொல் 10. அன்புடன் 12. மோக வலை 13. பகையா

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

Publisher : R.Rajesh
Editor : Saranya Rajesh
Photographs : Live View Media
Marketing Executive : M.C. Rajan
Designer : S. Aswini

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.

தமிழோடு விளையாடு!

## வார்த்தை தேடு

கட்டத்தில் உள்ள எழுத்துக்களில் 15 பயிர்கள் மற்றும் விதைகளின் வகைகளின் கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொ | ச் | சை | கு | க் | ண | ம | ஆ | ஒ | எ |
| கே | ழ் | வ | ர | கு | ன் | பீ | யா | சோ | ஔ |
| ஔ | ஐ | அ | உ | து | ஈ | ஆ | இ | சு | ஊ |
| அ | அ | ஔ | ஈ | வ | எ | ஐ | இ | ண் | ப |
| ஏ | ஐ | ரா | ஔ | ரை | ணி | பீ | து | ட | ட் |
| கொ | ள் | ளு | ஜ் | ஊ | ம | ன் | ந் | ல் | டா |
| ஒ | ஏ | ஏ | ரை | மா | ரா | ஸ் | ளு | ஐ | ணி |
| ஊ | உ | ஆ | வ | ஒ | கா | ஆ | உ | ஏ | ஒ |
| ஆ | ஓ | அ | அ | ஔ | கு | ள | மி | ல் | வா |
| கு | தி | ரை | வா | லி | ம் | ய | த | ந் | வெ |

சென்ற வார வார்த்தை தேடு விளையாட்டிற்க்கான விடைகள்

15 இசை கருவிகளின் பெயர்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ | ஈ | ஆ | ஆ | இ | கை | ரி | தி | த் | க |
| ஈ | டு | ஒ | ரி | ச | ச் | ச | ம் | ள | கா |
| ஏ | உ | க் | ஏ | கு | ழ | ல் | அ | ஏ | ஏ |
| க | வி | ழ் | கை | ஈ | ஊ | ஔ | ஒ | ஆ | உ |
| ஔ | ஈ | ம் | ம் | ள | தா | ர | க | ஒ | ம் |
| ரை | க | ட | ஒ | இ | ட | க் | கை | கு | ய |
| க | ழ | வ | ணி | ஔ | ல் | அ | ஏ | ல | ல |
| க் | ல் | ல | கி | டை | ழி | உ | எ | ல | இ |
| கொ | இ | ல் | ண் | ண் | ஏ | ஔ | எ | ல் | ஊ |
| ஒ | உ | க | கி | க | ஓ | ஊ | ஈ | க | எ |

### சொல் விளையாட்டு

கட்டத்தில் உள்ள எழுத்துக்களில் 10 வார்த்தைகளை கண்டுபிடியுங்கள்.

______________ ______________

______________ ______________

______________ ______________

______________ ______________

______________ ______________

இ ன்

று சா

ண்

தோ டை

ழ ட்

### அறுசுவை சமையல்

# ராகி பக்கோடா

**தேவையான பொருட்கள்:**

ராகி மாவு - 1 கப்
வெங்காயம் - 1
பொட்டுக்கடலை மாவு - 2 டீஸ்பூன்
காய்ந்த மிகளாய் - 3
பெருங்காயம் தூள் - 1 சிட்டிகை
கருவேப்பிலை - ஒரு கொத்து
உப்பு மற்றும் எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை:**

- வெங்காயத்தை நீளமாக நறுக்கி வைத்துக்கொள்ளவும்.
- பின்பு காய்ந்த மிளகாய், கருவேப்பிலை ஆகியவற்றை ஒரு பாத்திரத்தில் எடுத்து வைத்து கொள்ளவும்.
- அதனுடன் உப்பு, பெருங்காய தூள் ஆகியவற்றை சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும்.
- பின்பு ராகி மாவு, பொட்டுக்கடலை மாவு ஆகியவற்றை ஒன்றாக கலந்து, மாவு கெட்டியாகும் பதத்திற்கு தண்ணீர் சேர்த்துக்கொள்ளவும்.
- பின்பு அடுப்பில் கடாயை வைத்து தேவையான அளவு எண்ணெய் ஊற்ற வேண்டும். எண்ணெய் காய்ந்ததும் கலந்து வைத்துள்ள ராகி மாவை உதிரி உதிரியாக போட்டு பொறித்து எடுத்தால் சுவையான ராகி பக்கோடா தயார்.

### எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்.........



ஆசிரியர்: என்னப்பா..."எக்ஸாம்க்கு ப்ளம்பரை கூட்டிக்கிட்டு வந்திருக்க?"
மாணவன்: கொஸ்டீன் பேப்பர் லீக் ஆகுதுன்னு சொன்னங்க, அதான் சார்...

******

ஆசிரியர்: ஏன்டா..எக்ஸாம் ஹால்ல தூங்குற?
மாணவன்: எங்க அப்பா தான் பதில் தெரிலனா முளிச்சிக்கிட்டு இருக்காதனு சொன்னாரு...

******

ஆசிரியர்: நா வாழ்க்கைல நிறைய மேடு பள்ளங்களை பார்த்தவன்.
மாணவன்: ஏன் சார் நீங்க இதுக்கு முன்னாடி பஸ் கன்டக்டரா இருந்தீங்களா?

******

ஆசிரியர்: நா இன்னும் ஒரு வருஷத்துல ரிடைர் ஆக போறேன்
(மாணவன் அழுகிறான்)
ஆசிரியர்: அழுவாதபா நா இன்னும் ஒரு வருஷம் இருப்பேன்...
மாணவன்: நா அழுவுரதே அதுக்கு தான் சார்...

******

## விடுகதை விளையாட்டு

1. ஒற்றைக் காதுக்காரன், ஓடி ஓடி வேலி அடைக்கிறான். -அது என்ன?
2. புறப்பட்டது தெரிகிறது, போன சுவடு தெரியவில்லை. -அது என்ன?
3. பார்த்தால் கல், பல் பட்டால் நீர். -அது என்ன?
4. பிடி இல்லாத குடையைத் தொட முடியவில்லை. -அது என்ன?
5. மனிதன் போடாத பந்தலிலே மலர்ந்து கிடக்கின்றன பூக்கள். -அது என்ன?

சென்ற வார விடுகதை விளையாட்டிற்கான விடைகள்

1. தேள் 2. தலைமுடி 3.பட்டாசு
4. குரும்பு 5. விழுது

### அறிவியல் தகவல்

## மின்னலை கணக்கிடும் கருவி

முன்னதாக, பூமியில் இருக்கக்கூடிய ரேடியோ அலைகளைக் கண்டறியும் மின்னல் மேப்பிங் அரே நெட்வொர்க்குகளை (Mapping Array networks) பயன்படுத்தி மின்னல் கணக்கிடப்பட்டது.

இருப்பினும், மின்னல் பற்றிய ஆராய்ச்சியாளர்கள் அதி தீவிர மின்னலைக் கணக்கிடுவதற்கு தொழில்நுட்பத்தின் அளவை அதிகரிப்பது அவசியம் என்று கருதினர்.

அமெரிக்க தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் (NOAA) உலகின் முதல் மின்னல்-மேப்பிங் செயற்கைக்கோளை புவிசார் சுற்றுப்பாதையில் இயக்க, பூமியின் வானிலையை நமக்கு மேலே 36,000 கிலோமீட்டர் (22,300 மைல்) தொலைவில் இருந்து கண்காணித்தது. இதன் பொருள் பூமியின் வானிலையை 24/7 நாம் கண்காணிக்க முடியும் என்பது மட்டுமல்லாமல், அதிகரித்த மின்னல் செயல்பாடுகள், வெப்பமண்டல சூறாவளிகள் மற்றும் இடியுடன் கூடிய மழையினையும் கணிக்க உதவுகிறது.

TNBIL04133 R.Dis.No.1845/2014



A Unit of NFC Group
NIMS FOOD CO
Email:consultantnfc@gmail.com

For Home Delivery
Contact : 9047259981
9884563622
Minimum Order Rs.300/-

# SMK
SMART KITCHEN
## Multi Cuisine Restaurant
HONOUR TO SERVE

Soup | Kebabs | Grilled | Tandoori | Chinese | Gravies | Biriyani | Juice | Combo



We Under Take
PARTY ORDERS
CORPORATES
COLLEGE EVENTS ETC...
9047259981
No:25, New Colony, Velachery,
Chennai - 600042
Near Tata Consultancy
Restaurant E-Mail:smk2020r@gmail.com

Opening shortly
BARBEQUE & SHAWARMA
On February - 2021

## Soups

| | | |
|---|---|---|
| 1. | Veg Soup | 60 |
| 2. | Hot & Sour Veg Soup | 90 |
| 3. | Hot & Sour Chicken Soup | 90 |
| 4. | Chicken Clear Soup | 80 |
| 5. | Chicken Cream Soup | 90 |
| 6. | Mutton Soup | 100 |
| 7. | Jade Mix Soup | 120 |

## Chinese Starters

| | | |
|---|---|---|
| 8. | Gobi 65 | 90 |
| 9. | Chilli Gobi | 90 |
| 10. | Gobi Manchuriyan | 100 |
| 11. | Mushroom 65 | 100 |
| 12. | Mushroom Manchuriyan | 120 |
| 13. | Paneer 65 - 8 Pcs | 140 |
| 14. | Paneer Manchuriyan | 140 |
| 15. | Chilli Panneer | 140 |
| 16. | Chicken 65-8 Pcs | 140 |
| 17. | Chilli Chicken | 130 |
| 18. | Garlic Chicken | 130 |
| 19. | Pepper Chicken | 130 |
| 20. | Chicken Manchuriyan | 130 |
| 21. | Ginger Chicken | 130 |
| 22. | Dragon Chicken | 140 |
| 23. | Prawn 65 - 8 Pcs | 200 |
| 24. | Chilli Prawn | 200 |
| 25. | Garlic Prawn | 200 |
| 26. | Prawn Pepper Masala | 200 |
| 27. | Fish Fry - 2 Pcs | 150 |
| 28. | Fish Fry Big Size - 1 | 220 |
| 29. | Chilli Fish | 160 |
| 30. | Nethili | 150 |
| 31. | Fish Manchuriyan | 160 |
| 32. | Fish Pepper Masala | 180 |
| 33. | Kadai 65 | 220 |
| 34. | kadai Pepper Fry | 150 |
| 35. | Kadai Chilli Fry | 180 |
| 36. | Nattukozhi 65 | 250 |
| 37. | Nattukozhi Pepper Fry | 260 |
| 38. | Mutton Masala | 280 |
| 39. | Mutton Sheek Kabab | 280 |
| 40. | Mutton Pepper Masala | 280 |
| 41. | Dhawa Fish Fry | 200 |
| 42. | Vanjaram Fish Fry | 200 |

## Tandoori

| | | |
|---|---|---|
| 43. | Chicken Tandoori Full | 300 |
| 44. | Chicken Tandoori Half | 160 |
| 45. | Chicken Tandoori Quarter | 90 |



## Tikka & Kabab

| | | |
|---|---|---|
| 46. | Chicken Tikka - 7 Pcs | 150 |
| 47. | Chicken Hariyalli Tikka | 160 |
| 48. | Chicken Resmi Kabab | 160 |
| 49. | Chicken Seek Kabab | 160 |
| 50. | Fish Tikka | 180 |
| 51. | Fish Schezwan Tikka | 200 |
| 52. | Paneer Tikka - 7 Pcs | 180 |
| 53. | Spicy Paneer Tikka | 200 |
| 54. | Mutton Seek Kabab - 7Pcs | 240 |
| 55. | Mutton Bora Kabab | 260 |
| 56. | Chicken Cheese Kabab | 180 |

## Grill Chicken

| | | |
|---|---|---|
| 57. | Grill Chicken Full | 300 |
| 58. | Grill Chicken Half | 160 |
| 59. | Grill Chicken Quarter | 90 |



## Naan Items

| | | |
|---|---|---|
| 60. | Plain Naan | 20 |
| 61. | Butter Naan | 25 |
| 62. | Garlic Naan | 25 |
| 63. | Pudina Naan | 25 |
| 64. | Jira Naan | 25 |
| 65. | Paneer Kulcha | 45 |
| 66. | Chicken Kulcha | 45 |

## Chinese Rice

| | | |
|---|---|---|
| 67. | Veg Fried Rice | 80 |
| 68. | Egg Fried Rice | 90 |
| 69. | Chicken Fried Rice | 110 |
| 70. | Veg Schezwan Rice | 90 |
| 71. | Egg Schezwan Rice | 100 |
| 72. | Chicken Schezwan Rice | 120 |
| 73. | Fish Fried Rice | 140 |
| 74. | Prawn Fried Rice | 150 |
| 75. | Mutton Fried Rice | 160 |
| 76. | Mixed Fried Rice | 180 |
| 77. | Gobi Fired Rice | 100 |
| 78. | Mushroom Fried Rice | 120 |
| 79. | Paneer Fried Rice | 140 |
| 80. | Mixed Fried Rice Veg | 150 |
| 81. | Fish Schezwan Rice | 150 |
| 82. | Prawn Schezwan Rice | 160 |
| 83. | Mutton Schezwan Rice | 170 |
| 84. | Mixed Schezwan Rice | 190 |
| 85. | Gobi Schezwan Rice | 110 |
| 86. | Musroom Schezwan Rice | 130 |
| 87. | Panneer Schezwan Rice | 150 |
| 88. | Mixed Schezwan Rice Veg | 160 |
| 89. | Jeera Rice | 170 |
| 90. | Ghee Rice | 90 |
| 91. | Veg Pulao | 130 |
| 92. | Kashmir Pulao | 150 |



## Noodles

| | | |
|---|---|---|
| 93. | Veg Noodles | 80 |
| 94. | Egg Noodles | 90 |
| 95. | Chicken Noodles | 110 |
| 96. | Veg Schezwan Noodles | 90 |
| 97. | Egg Schezwan Noodles | 100 |
| 98. | Chicken Schezwan Noodles | 120 |
| 99. | Fish Noodles | 140 |
| 100. | Prawn Noodles | 150 |
| 101. | Mutton Noodles | 160 |
| 102. | Mixed Noodles | 180 |
| 103. | Gobi Noodles | 100 |
| 104. | Mushroom Noodles | 120 |
| 105. | Paneer Noodles | 140 |
| 106. | Mixed Noodles Veg | 150 |
| 107. | Fish Noodles | 150 |
| 108. | Prawn Schezwan Noodles | 160 |
| 109. | Mutton Schezwan Noodles | 170 |
| 110. | Mixed Schezwan Noodles | 190 |
| 111. | Gobi Schezwan Noodles | 110 |
| 112. | Musroom Schezwan Noodles | 130 |
| 113. | Panneer Schezwan Noodles | 150 |
| 114. | Mixed Schezwan Noodles Veg | 160 |

## Singapore Fried Rice

| | | |
|---|---|---|
| 115. | Singapore Chicken Rice | 140 |
| 116. | Singapore Mutton Rice | 180 |
| 117. | Singapore Prawn Rice | 160 |
| 118. | Singapore Fish Rice | 160 |

## Singapore Noodles

| | | |
|---|---|---|
| 119. | Singapore Chicken Noodles | 140 |
| 120. | Singapore Mutton Noodles | 180 |
| 121. | Singapore Prawn Noodles | 160 |
| 122. | Singapore Fish Noodles | 160 |

## Biriyani

| | | |
|---|---|---|
| 123. | Chicken Biriyani | 120 |
| 124. | Chicken 65 Biriyani | |
| 125. | Egg Biriyani | 100 |
| 126. | Plain Biriyani | 80 |
| 127. | Mutton Biriyani | 240 |
| 128. | Prawn Biriyani | 220 |
| 129. | Fish Biriyani | 220 |

## Gravy Variety

| | | |
|---|---|---|
| 130. | Navarthna Kuruma | 120 |
| 131. | Kadai Veg | 100 |
| 132. | Aloo Gobi Masala | 100 |
| 133. | Mushroom Masala | 120 |
| 134. | Panneer Butter Masala | 140 |
| 135. | Chicken Masala | 120 |
| 136. | Chicken Butter Masala | 180 |
| 137. | Chicken Tikka Masala | 140 |
| 138. | Kadai Chicken | 140 |
| 139. | Pepper Chicken | 130 |
| 140. | Chettinadu Chicken | 150 |
| 141. | Garlic Chicken | 130 |
| 142. | Mugalai Chicken | 180 |
| 143. | Mutton Masala | 200 |
| 144. | Mutton Rogan Masala | 230 |
| 145. | Mugalai Mutton Masala | 260 |
| 146. | Prawn Masala | 200 |
| 147. | Fish Masala | 160 |
| 148. | Fish Tikka Masala | 180 |
| 149. | Kaadai Masala | 130 |
| 150. | Kaadai Chettinad Masala | 150 |
| 151. | Nattu Kozhi Masala | 170 |
| 152. | Nattu Kozhi Chettinad Masala | 170 |
| 153. | Nattu Kozhi Pepper Masala | 170 |
| 154. | Kerala Chicken Curry | 160 |
| 155. | kerala Chicken Masala | 170 |
| 156. | Kerala Prawn Masala | 220 |
| 157. | Malabar Chicken | 200 |
| 158. | Hydrabadi Chicken Masala | 180 |
| 159. | Punjabi Chicken | 240 |
| 160. | Kerala Fish Curry | 200 |
| 161. | Dal Fry | 130 |
| 162. | Dal Taduka | 150 |
| 163. | Shahi Paneer | 170 |
| 164. | Malai Chicken | 180 |
| 165. | Bhindi Jaipuri | 110 |
| 166. | Chicken Gobi Bhaja | 180 |
| 167. | Mutton Rohan Juice | 180 |
| 168. | Spicy Hot Chicken Masala | 150 |
| 169. | Chicken Pepper Masala | 150 |
| 170. | Butter Chicken | 150 |
| 171. | Kadai Chicken | 160 |
| 172. | Andhra Chicken Masala | 160 |
| 173. | South Indian Chicken Masala | 160 |
| 174. | Prawn Pepper Masala | 210 |
| 175. | Prawn Tikka Masala | 220 |
| 176. | Fish Pepper Masala | 180 |
| 177. | Fish Chetrinadu Masala | 180 |
| 178. | Egg Masala (2 Egg) | 100 |

## COMBO OFFER!

**Mini Combo Non-Veg** — 350
Biriyani - With Egg +
Fish Fry 1 Pcs.+
Chicken 65 - 6 Pcs +
Soft Drink 1 Pcs.

**Mega Combo Non-Veg** — 550
Biriyani - With Egg +
Fish Fry 1 Pcs.+
Chicken 65 - 6 Pcs
Rotti 4 Pcs. +
Chicken Masala +
250Grm (Small Box)
+ Soft Drink 1 Pcs.

**Mini Combo Veg** — 300
Veg Fried Rice +
Gobi Manchuriyan +
Mushroom Fry 7 Pcs +
Soft Drink 1 Pcs.

**Mega Combo Veg** — 450
Veg Fried Rice +
Gobi Manchuriyan +
Mushroom Fry 7 Pcs +
Panneer Butter Masala +
Rotti 4 Pcs.+
Soft Drink 1 Pcs.

புலிகுளம் ஸ்ரீ சாஸ்தா துணை
P. தங்க துரை
உரிமையாளர்
# ஸ்ரீ சக்தி புரவிசன்


எண் 1/1,மேட்டுத்தெரு, வேளச்சேரி, சென்னை-600 042.
Ph: 044 2245 2623 / 4282 4454

WALKER
A. Muthumalai
Ph : 22430366
22430499
Cell : 9381025035

# WALKER ASSOCIATES
For Hire : Tables, Chairs, Carpets, Shamiyanas,
Buffey Tables, Fan, Stage, Bed, Cooking Vessels,
Water Proof Shamiyanas, Steel Structure, Pipe Pandal, etc.,
# 1, Dhandeeswaram Main Road, Velachery, Chennai - 600 042.
E-mail:walker_muthumalai@yahoo.co.in Web : www.walkerassociate.com

Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, No.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH